## செய்தி வெளியீடு

**செ.வெ. எண். 20** **நாள். 17.12.2017**

**எண்.11, டாக்டர்.இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல்–2017யை முன்னிட்டு, வாக்காளர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சி பல்வேறு இடங்களில் நடைபெற்றது என மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள எண்.11, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற இடைத்தேர்தல்–2017யை முன்னிட்டு, இன்று (17.12.2017) ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் பல்வேறு இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், வார்டு –41, காரநேஷன் நகரில் தினசரி வாசகர்களுக்கு அனுப்பப்படும் நாளிதழ்களுடன் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் இணைத்து அனுப்பியும், வார்டு –38, நேதாஜி நகர், 3–வது தெருவில் அமைந்துள்ள மஸ்ஜித் மசூதியில் தொழுகைக்கு வந்த பொதுமக்களிடமும் வார்டு –38, வினோபா நகரில் உள்ள அம்மன் கோவிலுக்கு வந்த பொதுமக்களிடமும் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கி வாக்களிப்பதன் அவசியம் குறித்து எடுத்துரைத்தும், வார்டு –40, திருவள்ளுவர் நகர், எஃப் தெருவில் வாக்களிப்பதன் அவசியம் குறித்த ரங்கோலி கோலப்போட்டி நடத்தியும், வார்டு–42, இளையமுதலி தெருவில், பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிநீர் கேன்களில் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பிரசுரங்கள் (Stickers) ஒட்டியும், வார்டு–40, வ.உ.சி. நகரில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இணைந்து, விழிப்புணர்வு பேரணி நடத்தியும், வார்டு–42 திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் விழிப்புணர்வு கையெழுத்து பிரசாரமும், வார்டு–42 கேசவன் தெரு, பேருந்து நிழற்குடையில் பேருந்திற்காக காத்திருந்த வாக்காளர்களிடம் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கியும், வார்டு–43, ஜீவரத்தினம் சாலையில், பொதுமக்கள் விநியோகிக்கப்படும் பால் பாக்கெட்டுகளில் விழிப்புணர்வு ஒட்டுப்படம் மூலமும் மேலும், ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும், பொதுமக்களிடம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து எடுத்துரைப்பதற்காக பல்வேறு விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள், பேரணிகள் மற்றும் மூன்று சக்கர வாகனத்தில் ஒலி பெருக்கி அமைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் போது 18 வயது பூர்த்தியடைந்த இளைஞர்களைச் சந்தித்து ஜனநாயக கடமையாற்ற உறுதிமொழி, வினாடி வினா நிகழ்ச்சிகள் நடத்தியும், நேர்மையாக வாக்களிக்கவும், கல்லூரி மாணவர்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கு விழிப்புணர்வு பற்றி எடுத்துக்கூறி அவர்களின் மூலம் மற்ற மாணவர்களை தேர்தலின் போது வாக்களிக்க செய்திடவும், ஒவ்வொரு பகுதியிலுள்ள நலச்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கூட்டம் நடத்தி அவர்களின் மூலம் மற்றவர்களையும் தேர்தலில் நேர்மையாக வாக்களிக்கச் செய்திடவும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.

அனைத்து வார்டுகளிலும் மூன்று சக்கர வாகனத்தில் ஒலிப்பெருக்கி அமைத்து, வாக்குச்சாவடிகளில் மாற்றுத்திறனாளிகள் தாமாகவே வந்து எளிதில் வாக்களிக்க ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் குறித்தும், இயந்திரத்தில் பிரெய்லி முறை உள்ளது குறித்தும், மக்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும், ஓட்டளிக்க பணம் வாங்காதீர், வாக்குச்சாவடியில் மாற்றுத்திறனாளிகளுக்கு சாய்தள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது குறித்தும், வேட்பாளர்களிடம் இருந்து பணம் பெற்றுக் கொண்டு வாக்களித்தல் குற்றச்செயலாக கருதப்படுகிறது என்றும், ஓட்டுக்கு வாங்காதீர் நோட்டு, மறக்காதே மறக்காதே தேர்தல் நாளை மறக்காதே, மறவாதே மறவாதே ஓட்டு போட மறவாதே, ஓட்டிற்கு பணம் கொடுப்பதும் வாங்குவதும் மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி குற்றச் செயலாகும் போன்ற வாசகங்களை ஒலிபரப்பி விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

பொதுமக்கள் சுதந்திரமாகவும், தன்னிச்சையாகவும் வாக்களிக்க அனைத்து வசதிகளும், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது என மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**